ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம :

# நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர்- 378) Oct (1) / 2022



நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

'ஸ்ரீ அஹோபில தாஸன்' க.ஸ்ரீதரன்

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஶ்ரீரங்கநாதோ ஜயது ஶ்ரீரங்கஶ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

## உட்பொதிவு


1. லக்ஷ்மீ தந்த்ரம் ......................................................................3
2. ஸங்கல்ப ஸூர்யோதயம் ......................................................................4
3. தத்வ த்ரயம்......................................................................5
4. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)......................................................................9
5. ஸ்தோத்ர ரத்னம் (பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்).........................13

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

# லக்ஷ்மீ தந்த்ரம்

(பகுதி – 198)

21-2. தாரகஸ்ய அவஸாநே து வாமநார்ணம் ஸமுத்தரேத்
22. தததஸ் த்ருப்திமாயோஜ்ய பூஷயேதுதயேந து
வ்யாபிநா சாங்கித: பிண்டச்சதுரர்ணோ மஹாத்புத:
23. நமஸ்காரஸ்தத: பச்சாத் ஸ்ரீநிவாஸபதம் தத:
பத்மாய வஹ்நிஜாயா ச பத்ம: அயம் த்ரிதசாக்ஷர:

**பொருள்** – தாரகமாகிய "ஓம்" என்பதன் இறுதியில் வாமந அக்ஷரமானது உயர்கிறது. அதன் பின்னர் த்ருப்தி அக்ஷரமாகிய "ஸ" என்பதும், அதன் பின்னர் "உ" என்பதும், அதனைத் தொடர்ந்து பிந்துவும் உள்ளன. இவ்விதமாக "வ், ஸ், உ" மற்றும் பிந்து ஆகியவை அமைந்துள்ளன. இந்த நான்கு வர்ணங்களைத் தொடர்ந்து பிண்டம் அமைகிறது. அதன் பின்னர் "நம:" உள்ளது. அதன் பின்னர் "ஸ்ரீநிவாஸ" என்பது, தொடர்ந்து "பத்மாய" என்பதும், அதன் பின்னர் "ஸ்வாஹா" என்பதும் உள்ளன. இந்த மந்த்ரமானது "ஓம் வ்ஸும் நம: ஸ்ரீநிவாஸபத்மாய ஸ்வாஹா" என்பதாகும்.

ஸ்ரீரங்கநாச்சியார் திருவடிகளே சரணம்
ஸ்ரீகமலவல்லி நாச்சியார் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீவேதாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

# ஸங்கல்ப ஸூர்யோதயம்

(பகுதி – 65)

[இப்போது திரைக்குள் துந்துபியின் ஒலி கேட்கிறது. விவேகனும் ஸுமதியும் அதனைக் கேட்கிறார்கள்]

[ஸுமதி மிகுந்த மகிழ்வுடன்] ஐயனே!

97. குளவட மோக்கணூஸவ ம்ருதங்க கஹா கடா ணவ
ஸமரூஸா வி ண அ ஹோட கடந்தகடா
தஹ வி ஜுந்த ஹோந்த தணடண்ணு ணிஹ க்வணோஒள
கஹ கஹ கோ வ ஹந்த ணிஹிளம் முஹளேட ணஹம்

[ஸுமதி கூறுவது] நம்முடைய குலபதியை விடுவித்ததை உணர்த்தும் ம்ருதங்க ஒலி இப்போது எவ்வாறு உண்டாகும்? மஹாமோஹனுடன் நிகழ்த்தப்படும் யுத்தத்திற்கு முன்பாக கொண்டு வரப்படும் யானைகளையும் காண இயவில்லை. அத்தகைய வாதிகள் என்னும் யானைகளை அழிக்கவல்ல சிங்கமும் இணைந்த பின்னரே அத்தகைய ஒலி உண்டாகும் அல்லவோ? ஆனாலும், ப்ரளய காலத்திற்கு நிகரான இந்த ஒலியானது, இடியின் ஓசையையும் குறைவாக்கும்படி உள்ளது.

[விவேகன்] ப்ரியமானவளே! இது, நம்முடைய வெற்றிக்கான நமது முயற்சியை நாம் தொடங்கவேண்டும் என்று ஊக்குவிக்கும் தேவ துந்துபியின் ஒலியாகும். இனி நாம் நம்முடைய தரப்பின் கொள்கைகளை ஸ்தாபித்து, மற்ற கொள்கைகளைத் தள்ளுவோமாக.

முதல் அங்கம் ஸம்பூர்ணம்

தூப்புல்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீரங்கநாச்சியார் ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் அருளிச் செய்த

# தத்வ த்ரயம்

இதற்கு ஸ்வாமி மணவாள மாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யானம்
(பகுதி – 76)

166. ஆனால், நிர்விகாரனென்னும்படி யென்னென்னில்,

**அவதாரிகை** - இப்படி, தானே ஜகத்தாய் பரிணமிக்குமாகில் "நிர்குணம் நிரஞ்ஜநம்", "நிஷ்களம் நிஷ்க்ரியம் சாந்தம்", "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம", "அவிகாராய சுத்தாய" என்று இவனை நிர்விகாரனாகச் சொல்லும்படி யெங்ஙனே? என்கிற சங்கையை அநுவதிக்கிறார் (ஆனால் நிர்விகாரன் என்னும்படியென்? என்னில்) என்று.

**விளக்கம்** – ஆனால் இவ்விதம் அவனே ஜகத்தாக மாறி நிற்கிறான் என்றால், ஆத்ம. (68) - நிர்குணம் (குணம் அற்றது) … நிரஞ்ஜனம் (தோஷம் அற்றது) – என்றும், ச்வே (6-19) - நிஷ்கலம் (உருவம் அற்றது), நிஷ்க்ரியம் (செயல்கள் அற்றது), சாந்தம் (அமைதியானது) – என்றும், தை. (1-1) - ஸத்யம் ஜ்ஞாநம் அநந்தம் – ஸத்யம், ஞானம், எல்லையற்ற ப்ரஹ்மம் - என்றும், அவிகாராய சுத்தாய – மாற்றம் அடையாதவன் தூய்மையாவன் - என்றும் உள்ள வாக்கியங்கள், "இவனை மாற்றம் அற்றவன்" என்று கூறுவது எப்படி என்ற சந்தேகத்தை எழுப்பிக்கொள்கிறார். இதற்கான விடையை அடுத்த சூர்ணையில் கூறுகிறார்.

167. ஸ்வரூபத்துக்கு விகாரமில்லாமையாலே.

**அவதாரிகை** - அத்தைப் பரிஹரிக்கிறார் (ஸ்வரூபத்துக்கு) இத்யாதியாலே.

**விளக்கம்** – அந்த ஐயத்தை தீர்த்து வைக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, சித் அசித் ரூப விசேஷண விசிஷ்டனான தானே ஜகத்தாய் பரிணமிக்குமிடத்தில விசேஷ்யமான ஸ்வரூபத்துக்கு விகாரமில்லாமையாலே நிர்விகாரன் என்னக் குறையில்லை யென்கை.

**விளக்கம்** – சித் மற்றும் அசித் ரூபமாக உள்ள வஸ்துக்களைத் தனது விசேஷணமாகக் கொண்டுள்ள தான், ஜகத்தாக மாறி நிற்கும்போது, அவற்றின் விசேஷ்யப் பொருளாக உள்ள தனது ஸ்வரூபத்திற்கு மாற்றம் இல்லை; ஆகவே இவன் மாற்றம் அடையாதவன் என்பதில் முரண்பாடு இல்லை.

168. ஆனால் பரிணாமமுண்டாம்படி யென்னென்னில்.

**அவதாரிகை** - ஸ்வருபத்துக்கு விகாரமில்லையாகில் "இவன்தானே ஜகத்தாய் பரிணமிக்கிறான்" என்ற பரிணாமம் இவனுக்குண்டாம்படி எங்ஙனே? என்கிற சங்கையை அநுவதிக்கிறார் (ஆனால் பரிணாமமுண்டாம்படி என்? என்னில்) என்று.

**விளக்கம்** – இவனுடைய ஸ்வரூபத்திற்கு மாற்றம் ஏற்படுவதில்லை என்றால், "இவன்தானே ஜகத்தாய் பரிணமிக்கிறான்" என்று கூறப்படும் மாற்றம் இவனுக்கு எப்படி உண்டாகிறது என்று சந்தேகத்தை எழுப்பிக் கொள்கிறார்.

169. விசிஷ்ட விசேஷண ஸத்வாரகமாக.

**அவதாரிகை** - அதுக்கு உத்தரம் அருளிச்செய்கிறார் (விசிஷ்ட விசேஷண ஸத்வாரகமாக) என்று.

**விளக்கம்** – கடந்த சூர்ணையில் எழுப்பிய சந்தேகத்திற்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** “விசிஷிடஞ்ச தத் விசேஷணம் சேதி விசிஷ்ட விசேஷணம்” என்று, ப்ரதமம் கர்மதாரய ஸமாஸத்தைப் பண்ணி, “த்வாரேண ஸஹ வர்த்தத இதி ஸத்வாரகம்” எனறு அநந்தர பதத்தை பஹுவ்ரீஹித்து, (விசிஷ்ட விசேஷணேந ஸத்வாரகம் விசிஷ்ட விசேஷண ஸத்வாரகம்) என்று த்ருதீயா தத் புருஷனாக சப்தத்துக்கு வ்யுத்பத்தி பண்ணிக்கொள்வது. விசிஷடமாவது விசேஷ யுக்தமானதாய், விசிஷ்டமான விசேஷணமென்று, தண்ட குண்டலாதிகள் போலன்றிக்கே சரீர பூதமாகையாலே, ப்ருதக் ஸித்தயர்ஹமல்லாத விசேஷத்தை உடைத்தான சித் அசித் ரூப விசேஷணத்தைச் சொல்லுகிறது. அன்றிக்கே, விசிஷ்ட விசேஷணம் என்கிறவிதுக்கு சரீர பூதமாய்க் கொண்டு, என்றுமொக்கத் தன்னோடே கூடியிருக்கிற விசேஷணமென்று பொருளாகவுமாம். அப்போதும் ப்ருதக்ஸித்தி அர்ஹமான தண்ட குண்டலாதிகளில் வ்யாவ்ருத்தி ஸித்திக்குமிறே. விசேஷணத்தாலே ஸத்வாரகமாகவென்றது இப்படி அப்ருதக் ஸித்தமான விசேஷணமாகிற ஹேதுவாலே த்வார ஸஹிதமாகவிவனுக்கு பரிணாமம் உண்டாகிறதென்கை. இத்தால், அப்ருதக் ஸித்தமான சித் அசித் ரூப விசேஷண த்வாரா இவனுக்கு பரிணாமம் உண்டாகிறது என்றதாயிற்று.

**விளக்கம்** - “விசிஷ்டஞ்ச தத் விசேஷணம் சேதி விசிஷ்ட விசேஷணம் - தனித்தன்மையுடன் அடையாளம் காண்பிக்கப்படும் பொருள் மற்றும் அடையாளம் என்பதே அடையாளத்துடன் கூடியுள்ள பொருள்” என்பதாக முதலில் பண்புத்தொகையாக உரைக்கிறார். அடுத்து, “ஸத்வாரகம்” என்பதை அன்மொழித்தொகை என்பதாகக் கொண்டு, “த்வாரேண ஸஹ வர்த்தத இதி ஸத்வாரகம் - மற்றவற்றுடன் சேர்ந்து நிற்பது என்பது ஸத்வாரகம்” என்று உரைக்கிறார்; அதாவது இங்கு, “விசேஷணத்துடன் கூடியுள்ள ஸத்வாரகம்” என்று மூன்றாம் வேற்றுமையாகக் கொள்க. விசிஷ்டம் என்பது அடைகொளியுடன் கூடியுள்ளதாக, விசிஷ்டமான விசேஷணம். அதாவது “தடியை வைத்துள்ளவன் தண்டீ” என்றும், “குண்டலம் அணிந்தவன் குண்டலீ” என்றும் அடையாளம் காண்பிக்கப்படுவது போன்று அல்லாமல், சரீரம் உள்ளதால் தனியாகப் பிரிந்து நிற்பதற்குத் தகுதி அற்றதாக உள்ள சிறப்பு கொண்ட சித் மற்றும் அசித் வடிவத்தில் உள்ள அடையாளங்களைக் கூறுகிறார். அல்லது “விசிஷ்ட விசேஷணம்” என்பதற்கு, சித் மற்றும் அசித் ஆகியவற்றைச் சரீரமாகக் கொண்டு, எப்போதும் தன்னுடன் கூடியுள்ள நிலை என்றும் கூறலாம். அப்போதும், சரீரம்

முதலானவற்றை விட, பிரிந்து அறிதலுக்குத் தகுதியாக உள்ள தடி மற்றும் குண்டலம் ஆகியவற்றிலிருந்து வேறுபாடு உண்டாகும் அல்லவோ? "விசேஷணத்தாலே ஸத்வாரகம்" - இவ்விதம் ப்ரஹ்மத்தை விட்டு அகலாதபடி உள்ள விசேஷணம் என்ற காரணத்தால், சித் மற்றும் அசித் ஆகியவை மூலமாக இவனுக்கு மாற்றம் ஏற்படுவதாகத் தோன்றுகிறது என்று கருத்து.

ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்

…தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

# திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 343)

**வ்யாக்யானம் –** இவர்தாம் "வளவேழுலகி"லே நாம் அவனோடே கலக்கையாகிற இது அவனுக்கு அத்யாவஹம்; நம் பேற்றுக்காக அவனோடே கலந்து அவனுக்கு அவத்யத்தை விளைப்பதிற்காட்டில் நாம் அகன்று முடிந்தாகிலும் அத்தலைக்கு அதிசயத்தைப் பண்ணவமையு மென்றிருக்குமத்தோடும் சேராது; "ஏராளுமிறையோ"னிலே அவனுக்கு உறுப்பல்லாத ஆத்மா நசித்துப் போக அமையுமென்று சொன்னவத்தோடும் சேராது; ஆக, வீதராகராயிருப்பார் செய்வதுமொன்றல்ல, இவர்தம் ஸ்வரூபத்தோடும் சேராது, ஜ்ஞாநாதிகராயிருப்பார் செய்வதுமொன்றல்ல; ஆனால் இது இருந்தபடியென்? இவற்றுக்கெல்லாம் பரிஹாரம், பட்டர் திருமடல் அருளிச்செய்தபோது அருளிச்செய்தருளினார், இங்குத்தைக்கும் வேண்டுவது சொல்லவேணுமிறே.

**விளக்கம் –** அடுத்து, மடல் எடுத்தல் என்பது மற்றவர்கள் விஷயத்திலும் சேராது, தனது ஸ்வரூபதிலும் சேராது என்று சந்தேகம் கொண்டு, அதனைப் போக்கிக் கொண்டு அருளிச்செய்கிறார். திருவாய்மொழி (1-5) - வளவேழ் உலகு – என்பதில், "நாம் அவனுடன் சேர்ந்திருத்தல் என்பது அவனுக்குத் தாழ்வை ஏற்படுத்தும். நம்முடைய பேற்றை அடைவதற்காக அவனுடன் சேர்ந்து, அவனுக்கு இப்படிப்பட்ட தாழ்வை நாம் ஏற்படுத்துவதைக் காட்டிலும், நாம் அவனை விட்டு அகன்று சென்று நாம் முடிந்து போவோம் என்று உள்ளபோதிலும், அவனுக்குப் பெருமையைச் சேர்ப்பதே சரியாக அமையும்", என்று கூறிய கருத்துடன் இங்கு கூறப்பட்ட மடல் எடுத்தல் என்பது சேராது. அடுத்து, திருவாய் (4-8) – ஏறாளும் –

என்பதில், அவனுக்கு உறுப்பாக இல்லாத ஆத்மாவும், ஆத்மாவுடன் சேர்ந்தவையும் அழிவதே சரியானது என்று கூறியதுடன், மடல் எடுத்தல் என்பது சேராது. ஆகவே இந்தச் செயலானது ஆசை இன்றி உள்ளவர்கள் செய்யும் செயலும் அல்லது ஞானம் நிறைந்தவர்கள் செய்யும் செயலும் அல்ல. அப்படியென்றால் மடல் எடுத்தல் என்னும் இச்செயல் உள்ள விதம் என்ன? இவற்றுக்கான சமாதானத்தை ஸ்வாமி பராசரபட்டர் திருமடலுக்கான வ்யாக்யானத்தை விளக்கும்போது அருளிச்செய்தார். இங்கு உள்ளதற்கும் அதையே கூறவேண்டும்.

**வ்யாக்யானம்** - ஜ்ஞாநாதிகராயிருப்பார் ஜநககுலத்திலுள்ளார்க்குமேல் இல்லையிறே; அது பிறந்த பிராட்டியானவள், “யா ந சக்யா புரா த்ரஷ்டும்” என்கிறபடியே, பெருமாள் காட்டுக்கு எழுந்தருளுகிறபோது “மன்னனிராமன் பின் வைதேவியென்றுரைக்கும் அன்னநடையவணங்கு நடந்திலளே” என்கிறபடியே அவர் பின்னே பிராட்டி புறப்பட்டுப் போகையாலே சிஷ்டாசாரமுண்டா யிருந்தது; இனித்தான் “மயர்வற மதிநலமருளப்பெற்ற” இவர் அநுஷ்டிக்கையாலே இது ப்ரமாணமாகத் தட்டில்லையிறே; “யத் யதாசரதி ச்ரேஷ்ட:” என்றும், “ஸ யத் ப்ரமாணம் குருதே” என்றும் ஸத்துக்களுடைய அநுஷ்டாநத்தை ப்ரமாணமாகக் கொள்ளக் கடவதிறே. ஆனாலும் காமத்தை நிஷேதியா நின்றதேயென்னில்; அப்ராப்த விஷயத்தில் காமத்தையிறே நிஷேதித்தது, அவை நிலைநில்லாமையாலே; பகவத் விஷயத்தில் காமத்தை “நிதித்யாஸிதவ்ய:” என்று விதியாநின்றதிறே. வேதாந்த விஹிதையான பக்தியையிறே இங்கு காமமென்கிறது.

**விளக்கம்** - ஞானத்தில் சிறந்தவர்களாக உள்ளவர்கள், ஜனகருடைய குலத்தில் பிறந்தவர்களைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் அல்லர். அத்தகைய குலத்தில் பிறந்த சீதை, அயோத்யாகாண்டம் (38-8) – யா ந சக்யா புரா த்ரஷ்டும் – யாரை ஆகாசத்தில் உலவும் தேவர்கள் கூடக் காண இயலாதோ – என்பதற்கு ஏற்ப இருந்த சீதை, இராமன் கானகம் சென்றபோது, பெரியதிருமடல் (51) – மன்னன் இராமன் பின் வைதேவி என்று உரைக்கும் அன்னநடைய அணங்கு நடந்திலளே - என்பதற்கு ஏற்ப அவன் பின்னே சென்றாள்; ஆக இங்கு ஞானம் நிறைந்தவர்கள் செய்த செயல் ஒன்று உள்ளது. மேலும் இவ்வாழ்வார், திருவாய்மொழி (1-1-1) - மயர்வற மதிநலம் அருளப்பெற்றவர் – என்பதற்கு ஏற்ப உள்ளவர் என்னும்போது, இவர் செய்கின்ற செயலானது ப்ரமாணமாக இருப்பதற்கு எந்தக் குறையும்

இல்லை. கீதை (3-21) – யத் யத் ஆசரதி ச்ரேஷ்ட: – உயர்ந்தவன் எதனைச் செய்கிறானோ – என்றும், "ஸ யத் ப்ரமாணம் குருதே - எந்த ஒன்று ப்ரமாணமாக உள்ளதோ" என்றும் கூறுவதற்கு ஏற்ப, ஸாதுக்களுடைய செயல்களை ப்ராமாணமாக ஏற்பது வழக்கமே ஆகும். ஆனால், காமம் என்பது விலக்கப்பட்ட ஒன்று அல்லவோ என்று கேட்கலாம். தாழ்ந்த விஷயத்தில் உள்ள காமமே விலக்கப்பட்டது, காரணம் அவை நிலையானவை அல்ல என்பதால் ஆகும். பகவத் விஷயதில் கொள்ளும் காமத்தை ப்ரு. (6-5) - நிதித்யாஸிதவ்ய: - த்யானிக்கப்படுபவன் - என்று விதித்தனர் அல்லவோ? வேதாந்தத்தில் விதிக்கப்பட்ட பக்தியே இங்கு காமம் எனப்படுகிறது.

**வ்யாக்யானம்** – "வளவேழுலகி"ல் நாம் கிட்டுகை அவனுக்கு அவத்யமென்று அகன்ற இவர், அத்தலையையழித்து முகங்காட்டுவித்துக் கொள்ளப் பார்க்கிற இது இவர் ஸ்வரூபத்தோடு சேருமோ என்னவும் வேண்டா; அங்கு அகல நினைத்ததும் அத்தலைக்கு அவத்ய பரிஹாரத்துக்காகவிறே; தமக்கு ஆற்றாமை கரைபுரண்டிருந்தது, "தன்னை யாசைப்பட்டார் பெறாதே முடிய, முகங்காட்டாதேயிருந்தான்" என்கிற அவத்யத்தைப் பரிஹரிக்கைக்குச் செய்கிறாராகையாலே, இதுவும் இவர் ஸ்வரூபத்தோடே சேரும். அங்கு அகன்றது ஜ்ஞாந கார்யம், இங்கு மேல்விழுகிறது பக்தி கார்யம். இத்தனை கலங்கப் பண்ணிற்றில்லையாகில் அத்தலையில் வைலக்ஷண்யத்துக்கு நமஸ்காரம். இவர்தாம் இப்படி கலங்கிற்றிலராகில் இவருடைய ப்ரேமத்துக்கு நமஸ்காரம். அவன் அருளிற்றும் மதிநலமிறே, அதுபடுத்துகிறபாடிறே இதெல்லாம்; மதியின் கார்யம் அது, நலத்தின் கார்யம் இது.

**விளக்கம்** – திருவாய்மொழி (1-5) - வலவேழ் உலகு – என்பதில், "நாம் அவனைச் சென்று அடைதல் என்பது அவனுக்குத் தாழ்வையே ஏற்படுத்தும்", என்று எண்ணி அகன்றார்; இவ்விதம் உள்ளபோது, மடல் எடுத்து அவனை இழிவுபடுத்தி, அவனைத் தனது திருமுகம் காணும்படிச் செய்ய எண்ணும் இந்த செயலானது, இவருடைய ஸ்வரூபத்துடன் சேருமோ என்றால், இவ்விதம் எண்ண வேண்டாம். காரணம், அங்கு அகன்று செல்ல எண்ணியது, அவனுக்குத் தாழ்வு ஏற்படும் என்று எண்ணியதால் அல்லவோ? தனது பிரிவாற்றாமை கரை புரண்டு ஓடியது; ஆகவே, "தன்னை விரும்பும் ஒருவர் தன்னைப் பெறாமல் முடியும்படியாக, தான் திருமுகம்

காண்பிக்காமல் நின்றான்", என்ற தாழ்வு அவனுக்கு ஏற்படக்கூடாது என்பதால், இங்கு மடல் எடுத்தல் என்னும் இந்தச் செயலானது இவருடைய ஸ்வரூபத்துடன சேர்வதாகவே உள்ளது. அங்கு இவர் அகன்று சென்றது ஞானத்தின் செயலாகும், இங்கு மடல் எடுத்தல் எப்படி பக்தியின் செயலாகும். இவ்விதம் இவரைக் கலங்கும்படிச் செய்யவில்லை என்றால் அவனுடைய மேன்மைக்குத் தாழ்வே ஆகும்; இவர் இவ்விதம் கலங்கவில்லை என்றால் இவருடைய ப்ரேமைக்குத் தாழ்வே ஆகும். அவன் அருளியது "மதி நலம்" ஆகும்; அவை செய்கின்ற செயலே இவை அனைத்தும் ஆகும்; அங்கு மதியின் செயல், இங்கு நலத்தின் செயல் ஆகிறது.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி ஆளவந்தார் அருளிச் செய்த

# ஸ்தோத்ர ரத்னம்

இதற்கு ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை

அருளிச் செய்த வ்யாக்யானம்

(பகுதி – 58)

**வ்யாக்யானம் -** (த்வதாச்ரிதாநாம்) ப்ரஹ்ம ருத்ராதீநாம் ஸநகாதீநாம் ச. தேவரீரை தூர நின்று ஆச்ரயிக்கிற ப்ரஹ்மாதிகள், ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களை உபதேச க்ரமத்தாலே பெற்று, ஸம்ஸார விமோசநத்தையும் பண்ண சக்தரான பின்பு, அநந்யப்ரயோஜநராய் ஆச்ரயிக்குமவர்கள் அவற்றைச் செய்யப் பார்த்தால் லீலையாகா நின்றது. முக்தர் தேவரோடே லீலாரஸம் அனுபவிக்கும்போது ஸங்கல்பத்தாலே ஜ்ஞாத்யாதிகளை ஸ்ருஷ்டித்திறே அனுபவிப்பது. “ஸங்கல்பாதேவ தச்ச்ருதே:”, “ஸங்கல்பாதேவாஸ்ய பிதரஸ் ஸமுத்திஷ்ட்டந்தி”.

**விளக்கம் -** (த்வதாச்ரிதாநாம்) - நான்முகன் மற்றும் ருத்ரன் ஆகியவர்களுக்கு அடங்கியவர்கள், ஸநகர் போன்றவர்களுக்கு அடங்கியவர்கள். இப்படியாக உன்னைத் தூரமாக நின்று அடிபணிந்து நிற்கும் நான்முகன் போன்றவர்கள், “ஸ்ருஷ்டித்தல், காத்தல், அழித்தல்” போன்ற செயல்கள் செய்வது குறித்து உன்னிடமிருந்து உபதேசம் பெற்று, ஸம்ஸாரத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள சக்தி அடைந்த பின்னர், வேறு எந்தப் பயனையும் கருதாமல் உன்னையே அண்டி நிற்கும் அவர்கள், அந்தச் செயல்களைச் செய்வதைக் காணும்போது உனது லீலைகளாகவே தென்படுகின்றன. முக்தர்கள் உனது லீலைகளை அனுபவிக்கும்போது ஸங்கல்பம் மூலம் ஞானம் போன்ற பலவற்றையும் உண்டாக்கி அல்லவோ அனுபவிக்கிறார்கள்? ப்ர. ஸூ (4-4-8) – ஸங்கல்பாத் ஏவ தத் ச்ருதே: - ஸங்கல்பத்தின் மூலம் முக்தன் ஸ்ருஷ்டிக்கிறான் என்று ச்ருதி கூறுகிறது - என்றும், சாந். (8-2-1) – ஸங்கல்பாத் ஏவ அஸ்ய பிதரஸ்

ஸமுத்திஷ்ட்டந்தி - இவனுடைய ஸங்கல்பம் மூலம் கிளம்புகின் றன - என்றும் உள்ளது காண்க.

ஸ்வாமி ஆளவந்தார் திருவடிகளே சரணம்

ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்